அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு 2024

# தமிழ் - ஆண்டு 11

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

விளைந்து பயன் தரும் பயிர்களுக்கிடையே களைச்செடிகள் முளைப்பதைப் போல நல்லவர்களிடையே சில தீய எண்ணங்களைக் கொண்டவர்களும் உள்ளனர். பயிர்களுக்கிடையே காணப்படும் களையை நீக்கிப் பயிர்களைப் பாதுகாத்து வளர்ப்பது போலவே தீய எண்ணங்களைக் கொண்டவர்களிடமிருந்து விலகி வாழப்பழக வேண்டும். பெற்றோர் பெரியவர்களின் பட்டறிவுகளைக் கேட்டறிவதாலும் எம்மை நாமே நல்வழிக்கு உட்படுத்திக் கொள்ளலாம். மாந்தப் பிறப்பு ஆறறிவு கொண்டதாகவும் சிந்திக்கும் ஆற்றல் மிக்கதாகவும் அமையப்பெற்றது.

இளையவர்களாகிய நாம் எமது சிந்தனை ஆற்றலை வளர்ப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நல்ல நூல்களைத் தேடிப் படித்தால் பயனுண்டு என்பதையே “வாசிப்பதால் மாந்தன் முழுமையடைகிறான்” என்ற முதுமொழி சொல்கிறது. ஓய்வு நேரத்தைப் பயனற்றுச் செலவிடுவதைத் தவிர்த்து, ஆக்கத்திறன் வாய்ந்த செயல்களுக்குப் பயன்படுத்தப் பழகவேண்டும். நாங்கள் பள்ளியிலும் பல்கலைக்கழகத்திலும் தொழிற்கல்வியிலும் கற்பவற்றை வாழ்வுக்குப் பயன்படுத்தும் எளிய வழிகளைக் கண்டடைவோம்.